DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 2178/15 |
| Deposition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | செல்லம்மாள் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 05-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன், நான் கடந்த 2015 ம் வருடம் அரசு பேருந்தில் பயணம் செய்த போது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டது இந்த விபத்தின் போது யார் வாகனத்தை ஓட்டினாரா என்ப நினைவில் இல்லை. சம்பவத்தின் போது நான் தூங்கி கொண்டு இருந்ததால் எனக்கு ஒன்றும் தெரியாது காவல் நிலையத்தில் எழுதிய புகார் மனுவில் நான் காவலர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் கையொப்பம் மட்டும்அ.சா.ஆ 1 ஆகும். புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 2.8.2015 ம் தேதி திருச்செந்தூர் செல்ல நான் பேருந்து எண்.TN72N1419 ல் பயணம் செய்தேனா என்றால் ஆமாம் . அந்த பேருந்து திருச்செந்தூர் ரோட்டில் தென்திருபேரைக்கு முன்பு உள்ள முத்துகிருஷ்ணாபுரம் திருப்பத்தில் காலை 10 மணிக்கு எதிரி ஓட்டி சென்று வயலில் இறக்கிவிட்டார் என்றால் நான் தூங்கியதால் எனக்கு தெரியாது நான் புகார் மனுவில் யார் யாருக்கு காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் காவலர்கள் சொல்லி தெரியும் சம்பவம் முழுக்க முழுக்க எதிரியால் அஜாக்கிருதையாக நடந்தது என்றால் எனக்கு தெரியாது . காப்பீடு தொகை பெறுவதற்காக வேண்டி கொடுக்கப்பட்ட புகாருக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை